1984 மார்ச் 28] (திரு. சு. முத்துசாமி)

எனவே, அந்த வகையில் உடனடியாக எவ்வளவு விரைவிலே முடியுமோ அந்த அளவுக்குப் பேசி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற உணர்வை அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்குப் பேசுவது கூட மத்திய அரசினுடைய காதுக்கு நிச்சயமாக எட்ட இருக்கின்றது. வேண்டுமானால் அரசின் சார்பாக நிலைமைகளை, விளக்கி ஒரு கடிதத்தை எழுத நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம் :

விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சு. பாலன் த. வேணுகோபால், செ. இராமலிங்கம், கு. ரமணி, பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லப்பன், என். ஏ. பூங்காவனம், ஏ. டி. கருப்பையா, மு. அப்பாதுரை, பொ. உத்திராபதி, என்.எஸ்.வி. சித்தன், இல. பலராமன், எல். இளையபெருமாள், டி. மணி, என். பழனிவேல் ஆகியோர், ''மதுரை, கோவை மற்றும் அண்ணாமலை பல்கலைக் கழக விவசாயக் கல்லூரி மாணவர்கள் கடந்த சில நாட்களாக தொடர் உண்ணாவிரதம் இருப்பதால் ஏராளமான மாணவர்கள் மயக்கமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதால், மாணவர் களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: அவைத் தலைவர் அவர்களே, கோவை மதுரை, அண்ணாமலை ஆகிய இடங்களிலே உள்ள விவசாயக் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் — 6 மாதம் டிப்ளமோ படித்து பாஸ் செய்தவர்கள் வேளாண்மைத் துறையிலே துணை அதிகாரிகளாக நியமிக்கப்படலாம் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது—அந்த உத்திரவை ரத்து செய்ய வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாமையால் அங்கே 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் கடந்த இரண்டு நாட்களாக மதுரையிலே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்தவர்கள்

மயக்க முற்று ஏறத்தாழ 50 மாணவர்களுக்குமேல் மதுரையிலே மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அரசு அவர்களைப், பழிவாங்கவேண்டுமென்ற எண்ணத்தோடு மதுரை மருத்துவமனையிலே அவர்களுக்குப் படுக்கைக்கூட கொடுக்காமல் தரையில் போட்டு சிகிச்சை அளிக்கக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தினால், இது முக்கியமானது என்று கருதி இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அரசும் அமைச்சர் அவர்களும் இந்தத் தீர்மானத்தை உடனடியாக விவாதிக்கவேண்டுமென்று முன்வந்துள்ளது வரவேற்கத்தக்க விஷயம். இன்று, காலையில் தான் எனக்கு ஒரு தந்தி வந்தது.

2,000 students Huger strike situation Tens:—100 h sp t ls d. என்று வந்திருக்கிறது. கிட்டத்தட்ட இரண்டுஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள், அவர்களுடைய கோரிக்கைகள் மிகவும் நியாயமான கோரிக்கைகள் என்று பல விவரங்கள் இருக்கின்றன. அந்த விவரங்களை அடிப்படையாக வைத்து அதன்பேரில் ஒரு நியாயமான முடிவுக்கு வர வேண்டும் என்ற அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை ஏற்று விவாதிக்க வேண்டும் என்பதற்காக நான் சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பிட்ட விவசாயப் பாடங்கள் கற்று தேர்ச்சி பெற்றுள்ளவர்கள் அவர்கள் அந்த குறிப்பிட்ட மேல்வேலைக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ச்சியாக அந்த மாணவர்கள் கேட்டுக்கொண்டே வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே, கோவையிலே இருக்கிற விவசாயக் கல்லூரி மாணவர்களிடையே இதே பிரச்சினை வந்து அவர்கள் உண்ணாவிரதம் இருந்து ஒருவிதமாக பேசி சமரசம் முடிக்கப்பட்டது. மறுபடியும் அந்தப பிரச்சினை ஏற்பட்டு அதற்கு நியாயமான ஒரு அடிப்படையில் தீர்வு ஏற்படாததன் விளைவாக படித்துப் பட்டம் பெற்றவர்களை—அந்த வேலையிலே நன்கு அனுபவம் உள்ளவர்கள் இருப்பதால் அவர்களைக் கொண்டுதான் அந்த வேலைகளைத் திறமையாகச் செய்ய முடியும் என்ற கண்ணோட்டம் அரசாங்கத்திற்கு இருக்கலாம்—விவசாயக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றவர்களை அதற்கான குவாலிபிகேஷன் உள்பட உள்ளவர்களை அந்தப் பதவியில் நியமிக்காமல் அவர்களுடைய அனுபவம் ஒன்றே போதுமென்ற நிலையில் எடுத்துக் கொண்டால் அடிப்படையில் ஒரு முரண்பாடு ஏற்படுகிறது, ஆகவே, அனுபவமும் தேவை, அதே சமயத்திலே படிப்பும் தேவை அந்த அடிப்படையிலே இரண்டையும் சேர்த்து ஒரு அணுகு முறையைக் கடைப்பிடிக்காத வரையில் இப்படிப்பட்ட முரண்பாடு நீடிக்கத்தான் செய்யும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட தகுதியில்லாதவர்களை நியமிப்பதன் மூலமாக ஏற்பட்டுள்ள தூண்டுதல் "புரவொக்கேஷன்" அந்த மாணவர்களை ஆத்திரத்திற்கு இரையாக்கியிருக்கிறது என்று

1984 மார்ச் 28] [திரு. கு. ரமணி]

சொன்னால் அது மிகையாகாது. அதை எதிர்த்து மதுரை சரி, அண்ணாமலையிலும் சரி, கோவையிலும் சரி, விவசாயக் கல்லூரிகளிலே உள்ள மாணவர்கள் இந்தத் தந்தியிலே சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் 2,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அடிப்படையான விஷயத்தை உடனடியாக அரசு பரிசீலனை செய்து இணக்கமான முறையில் தீர்வு காணவேண்டும். ஆஸ்பத்திரியிலே கொண்டுபோய் வம்புக் கட்டாயமாக — ஏனென்றால் மயக்கமுற்ற மாணவர்களை ஆஸ்பத்திரியிலே கொண்டுபோய் சேர்த்தால் முதலிலே அவர்கள் குளுக்கோஸ் இன்ஜக்ஷன்தான் போடுவார்கள், அதன் மூலமாக உண்ணாவிரதத்தை முறியடிக்கத்தான் அது பயன்படும், இதிலே நாங்கள் அனுபவம் உள்ளவர்கள் — ஆகவே, அந்த நிலைமையெல்லாம் மேலும் மேலும் ''எஸ்ட்ரேஞ்ச்மெண்ட்'' தான் ஏற்படுத்தும். மாணவர்கள் மத்தியில் நல்ல நிலையை ஏற்படுத்தாது. அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு நியாயமான முடிவு காண்பதற்காக அந்தக் கோரிக்கைகளை சரியாகப் பரிசீலனை செய்யவும் ஒரு முடிவு காணவும் இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்றும் ஒரு இணக்கமான தீர்வு காண்பதற்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00).

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவை, அண்ணாமலை, போன்ற இடங்களில் உள்ள விவசாய பல்கலைக் கழக மாணவர்கள் கடந்த 10 தினங்களாக காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை அவர்கள் பெற்று இருக்கின்ற பட்டத்திற்கு தகுந்தவாறு அவர்களுக்கு வேலை வாய்ப்பு உத்திரவாதம் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையான கோரிக்கையை முன் வைத்து இன்றைக்கு அவர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த உண்ணாவிரதத்தில் அங்கு இருக்கக்கூடிய பெண்கள் கூட நூற்றுக்கணக்கான பேர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். நேற்றையதினம், மதுரையில், தொடர் உண்ணாவிரதம் இருந்த மாணவர்கள் மயக்கமுற்ற நிலையில் இராஜாஜி அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில் எப்படி தொழிலாளர்கள் கொள்கையில், அதாவது, போராடுகின்ற தொழிலாளர்களை போராட விட்டு விட்டு காலம் கடந்தி அந்தப் பிரச்சினையை அணுகுவதைப் போல் இந்த மாணவர்கள் பிரச்சினையில் அந்தமாதிரியான அணுகுமுறையைக் கையாள வேண்டாம் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை

கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இன்றைக்கு போராடுகின்ற மாணவர்களினால் நம்முடைய நாட்டில் விவசாயம் பெருகுவதற்கு, விவசாயத் துறையில், முன்னேற்றம் பெருகுவதற்குமான சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே இப்படிபட்ட சூழ்நிலையை உருவாக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாணவர்களை சந்தித்து உடனடியாக அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட உறுதிமொழியை இந்த மன்றத்தில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சினை மீண்டும் தொடரக்கூடாது. ஆகவே இந்த மாணவர்கள் பிரச்சினையை தீர்த்து வைக்கின்ற முறையில் விரிவாக இந்த மன்றத்தில் விவாதிக்க வேண்டியிருக்கிற காரணத்தால் இந்த மன்றத்தினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டும் என்று கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் இன்றைக்கு ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. நான் இன்றைக்கு காலையில் தான் மதுரையிலிருந்து வந்தேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல் மதுரையில் இருக்கின்ற வேளாண்மைக் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம் என்ற முறையில் உண்ணாவிரதத்தை தொடர்ந்து இருக்கிறார்கள். இன்றைக்கு ஏடு தூக்கி கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் நாளை நாடு காக்க கூடிய பொறுப்பில் இருக்கக்கூடிய அவர்கள் உண்ணவிரதம் என்று சொல்லக்கூடிய மிக கடுமையான இந்த போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்குள்ள உணர்வுகளின் பாதிப்புகள் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. மதுரை வேளாண்மைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் 425 பேர் படிப்பதாகவும் அதில் 50க்கும் அதிகமானவர்கள் பெண்களாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். நேற்றையதினம் மதுரையில் நடந்த இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 26க்கும் அதிகமான பேர்கள் மயக்கமுற்ற நிலையில் இன்றைக்கு மதுரையில் இருக்கின்ற அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருப்பதாக செய்திகள் நமக்கு கிடைத்து இருக்கின்றன. எங்களுக்கு கிடைத்த தகவல்படி இந்த வேளாண்மைத் துறையில் பதவி உயர்வு அல்லது பதவி அளிப்பதற்கு ஏற்கெனவே இருக்கின்ற பட்டதாரிகளுக்கு 90 சதவீதம் வேலைவாய்ப்பும் அந்த இலாக்காவில் பணிபுரிகின்றவர்களுக்கு எஸ்.டி.ஓ. என்று சொல்கிறார்கள் அவர்களுக்கு வேலை உயர்வு என்ற முறையில் 10 சதவீதம் கொடுப்பதும் இன்றைக்கு அமுலில் இருப்பதாகவும்,

விடுத்து படித்த வேளாண்மை பட்டதாரிகளுக்கு அத்தனையையும் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிரதம் இருப்பதாக எங்களுக்கு செய்திகள் கிடைத்து இருக்கிறது. பொதுவாக அந்தத் துறையில் பணிபுரிகின்றவர்களுக்கு ஒரு உற்சாகம் அளிக்கும் வகையில் வேலை உயர்வு ஒரு கணிசமான பகுதி ஒதுக்கித் தர வேண்டும் என்பது ஒரு நியாயமான கோரிக்கையாக இருந்தாலும்கூட மாணவர்கள் வேறு என்ன கோரிக்கை முன்னால் வைத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரைக்கு மிகவும் நெருக்கமானவர்கள். நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மதுரைக்குப் புறப்பட்டுச் சென்று மாணவ கண்மணிகளை அழைத்துப் பேசி இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுமாறு செய்து அவர்கள் மனம் ஏற்கின்ற வகையில் ஒரு சுமூகமான சூழ்நிலைக்கு முயற்சிகளை அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மதுரையில் இருக்கிற பதட்டமான சூழ்நிலை வேறு பல ஊர்களில் உள்ள வேளாண்மைக் கல்லூரிக்கும் இந்த நிலை பரவுவதற்கான சூழ்நிலை இருக்கிற காரணத்தால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருந்தத்தக்க வகையில் ஒரு கற்பனையான அச்சத்தை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் இந்த உண்ணாவிரத முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண்மைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறக் கூடிய மாணவர்களுக்கு 90 விழுக்காடு அலுவலர் பதவியில் சேருவதற்கும் அதிலே பணியாற்றுகின்ற பட்டயப் படிப்புப்பெற்றவர்கள் 10 விழுக்காடு அந்த பதவியில் பதவி உயர்வு பெற்று சேருவதற்கும் விதிமுறைகள் 1970லே வகுக்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றன.

நான் இங்கே ஒரு உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன். வேளாண்மைக் கல்லூரியில் படித்துப்பட்டம் பெறும் பட்டதாரிகளே கூட ஏறத்தாழ 30 விழுக்காடுதான் இந்தத் துறையில் அலுவலகத்திற்கு வந்து சேருகிறார்கள். மற்றவர்கள் தனியார் துறையிலும், வங்கிகளிலும் பேர்ய்ப் பணியாற்றுவதற்குச் சேர்ந்து விடுகிறார்கள்.

[டாக்டர் கா. காளிமுத்து] [1984 மார்ச் 28

நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். வேளாண்மைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இந்தத் துறைக்குத் தேவைப்படுகிறது. ஆகவே நாம் புதிய வேளாண்மைக் கல்லூரிகளைத் திறக்க வேண்டிய அவசியம் கூட இருக்கிறது. வேறு எந்தத் துறையிலேயும் இல்லாத அளவிற்கு, வேளாண்மைக் கல்லூரிகளிலே படித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதம் இருப்பதை இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

இன்னொரு மாற்றத்தையும் கூட நாங்கள் செய்ய விரும்புகிறோம். அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யும் நிலைமையில்லாமல், நேரடியாகவே வேலை வாய்ப்பு பெறுகின்ற அளவிற்கு நிலைமைகளை அரசு உருவாக்கியிருக்கிறது. ஆகவே, பணி வாய்ப்பு என்பது அவர்களுக்கு எந்த வகையிலும் குறைந்துவிடவில்லை, எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை என்பதையும் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பத்து விழுக்காடு பதவி உயர்வு பெறுபவர்கள் இந்தத் துறையிலே நீண்ட காலமாகப் பணியாற்றுகின்ற பட்டயப்படிப்பு படித்தவர்கள். இங்கேயுள்ள மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏழாயிரம், எட்டாயிரம்; பேர் இந்த துறையிலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் அதே தேக்க நிலையிலேயே காலம் காலமாக இருந்து ஓய்வு பெற வேண்டுமென்றால் அவர்கள் எப்படி உற்சாகமாகப் பணி புரிய முடியும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே, அவர்களது தேக்க நிலையைப் போக்க வேண்டும் என்பதற்காகவும், படித்து விட்டு இருக்கின்ற பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், இதற்கான இணக்கமான சூழ்நிலையில் பத்து விழுக்காடு என்று ஒதுக்கியிருக்கிறோம்.

இடையிலே ஒரு சிக்கல் இருந்தது. அரசு சில புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தும் பொழுது, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தைக் கொண்டு வருகின்றபொழுது அதில் பணியாற்றுவதற்கு வேளாண்மை அலுவலர்கள் கிடைக்கவில்லை ; ஆகவே, இருக்கின்ற பட்டயப் படிப்பு படித்த அலுவலர்களை 25 விழுக்காடு அந்தப் பதவிகளில் நியமிக்கலாம் என்று அரசு ஒரு நேரத்தில் முடிவு செய்து, ஆனால் மாணவர்கள் அதை விரும்பவில்லை. அதற்குக் கண்டனம் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு அது மறுபடியும் பத்துவிழுக்காடு என்று குறைக்கப்பட்டது.

மாணவர்களை ஏற்கெனவே சந்தித்துப் பேசியிருக்கிறேன். நம்முடைய துறையின் செயலாளர் சந்தித்துப் பேசியிருக்கிறார். அவர்களுக்கு இந்த விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன, உங்களில் படித்து விட்டு, வேலைவாய்ப்பு கிடைக்க முடியாமல்; யாராவது இருக்கிறீர்களா, அப்படியிருந்தால் அந்தப் பட்டியலைக் கொடுங்கள், உடனடியாகக் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அல்லது படித்து விட்டு ஆறு மாத காலம் அல்லது ஒரு வருட காலம் என்று வேலை கிடைக்காமல் தேங்கியிருக்கின்ற நிலைமை இருக்கிறதா என்று கேட்டேன். அப்படிப்பட்ட நிலைமைகள் வந்து, அப்படி உங்களுடைய எண்ணிக்கை அதிகமாக வரும் நிலைமைகள் வந்தால், இதைப்பற்றி பேசலாம்; பத்து விழுக்காடு என்பதைக் கூட பரிசீலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

ஆனால் உடனடியாக, வேலை கிடைக்கும் என்ற நிலைமையிருந்தும், அதிலே உள்ளவர்களுக்கு பத்து விழுக்காடு கூட கொடுக்கக் கூடாது என்று போராடுவது எப்படி நியாயத்தின் பாற்பட்டது. எப்படி மனிதாபிமானத்தின் பாற்பட்டது. எப்படி சட்டத்தின்பாற் பட்டது என்பதை இங்கே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களின் அச்சத்தைப் போக்குவதற்குப் புள்ளி விவரங்களைத் தந்து அளிக்க நாங்கள் தயார்; துறை தயாராக இருக்கிறது. நான் கூட, நீங்கள் விரும்பும் நாளில் வாருங்கள், அத்தகைய விளக்கங்களைச் சொல்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அப்படியிருந்தும் அவர்கள் இந்த வகையிலே உண்ணா நோன்பினை மேற்கொண்டிருக்கிறார்கள்.

உண்ணா நோன்பு மேற்கொண்டிருப்பவர்களை பாதுகாப்பது எப்படி; அவர்களுடைய உயிரைப் பாதுகாப்பது எப்படி என்பதில் அரசு மிகுந்த அக்கறை காட்டும். திரு. ரமணி அவர்களுக்கு உண்ணா நோன்பு இருந்த அனுபவம் இருக்கிறது; அதைப் போல எனக்கும் உண்ணா நோன்பு இருந்த அனுபவம் உண்டு. ஆகவே, எந்த வகையிலே மாணவர்களைப் பாதுகாப்பது என்ற முயற்சியிலே அரசு தளர்ச்சியாக இருக்காது. எந்த நேரத்தில் வந்தாலும் பேசத் தயாராக இருக்கிறோம்.

அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்சம் நியாயமற்றது; கற்பனையானது என்பதை எடுத்துச் சொல்லி, அவர்களை அழைத்துப் பேசுவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்கள் எங்களுடைய

வேண்டுகோளை நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள். ஒப்புக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஏனென்றால், நாங்கள் எடுத்துச் சொல்லும் வாதத்தில் நியாயம் இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, பேரவைத் தலைவரவர்களே, இதில் அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(முற்பகல் 10-10.)

4. கவன ஈர்ப்புகள்.

(அ) காட்பாடி தொகுதியில் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். ஏ. பூங்காவனம், தி. கா. நல்லப்பன், சோ. அழகர்சாமி, கே. ஆர். சுந்தரம், மு. அப்பாதுரை, ஜி. மூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, ''காட்பாடி தொகுதி, தண்டலம் கிருஷ்ணாவரம் கிராமத்தில் பெண்களிடத்தில் தகாத முறையில் நடந்து கொண்ட வாலிபர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.